Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300] of 1953. விரோதிஷு (1889) ஆவணி மீ 28 உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எச] யாழ்ப்பாணம்:- சுபகிருதுஷு ஐப்பசிமீ கஎஉ வெள்ளிக்கிழமை (2 November. 1962) [இல-௩௦]

உலகியல் அலை

# பொழுதுபோக்கு அரசியற்கட்சிகளின் புரட்சிப்பொழிப்பு

## யாரோ போர் புரிய யாரோ வேலை நிறுத்தம்

**வெறும் விளையாட்டாய் வந்து விட்டது அரசியற் கட்சிகளின் அலுவல்கள் பொழுதுபோக்குக்காகப் புரட்சிமுறையைக் கையாளும் கட்சிகளைப்பற்றிய உண்மை நிலைமை புலப்படுகின்றது.**

தொட்டதற்கெல்லாம் வேலை நிறுத்தம், கண்டதற்கெல்லாம் கண்டனம். உருசியரும் அமெரிக்கரும் ஒருவருகொருவர் சண்டையென்றால் கொழும்புத் துறைமுகத்திலே கொழுத்தாடு பிடிக்கிறார்கள் குழப்படிகாரர். வேடிக்கைக்கு வேலை நிறுத்தஞ் செய்து மக்களுக்கு வினை தேடும் அரசியற் கட்சிகளின் போக்கை மக்கள் உண்மையாயறிய வேண்டும்.

தேசியம் தேசியம் என்று வாய்கிழியக் கத்தும் இந்தக் கட்சிகள், இந்த நாட்டுத் தமிழர் தாய்நாட்டுடன் கலாச்சாரத் தொடர்பு வைத்திருப்பதுகூடத் தேசியத்திற்குப் பங்கமாகுமென்று பதறித் துடிக்கும் கட்சிகள் இந் நாட்டின் பொருள்நிலையையும் நிம்மதியையும் பாழ்படுத்தும் வகையில் நடந்துகொள்ளும் ஒரு செயலே அவர்கள் 'தேசீயக் கூச்சலின் ஆழத்தை அறிவதற்குப் போதாதா? ——

## மெய்கண்டதேவ நாயனார்

—————:0:—————

[28-10-62 ஞாயிற்றுக்கிழமை சைவபரிபாலன சபையார் ஆதரவில் நடைபெற்ற "மெய்கண்டதேவநாயனார்" குருபூசை விழாவில் சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி ஆசிரியர் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்.]

நாம் சைவ சமயத்தவர் என்று துணிந்து கூறக்கூடிய நிலையில் சைவ சமயத்தை வளர்த்தவர்கள் சமயகுரவர், சந்தானகுரவர்கள் என்பது வெள்ளிடை மலைபோல் புலனாகின்றது.

ஐப்பசி மாதச் சுவாதி நட்சத்திரத்திலே முத்தியடைந்தவர் மெய்கண்டார். அன்னாரின் குருபூசை விழாவினைச் சிறந்த முறையிற் கொண்டாட வேண்டியது சைவமக்கள் ஒவ்வொருவரினதும் தவறாத கடைமையாகும். இந்த நிலையிலே சைவபரிபாலன சபையார் ஆற்றிவரும் சேவை பாராட்டற்குரியது.

சைவ சித்தாந்த நூல்களில் முன்னணியில் யாவராலும் போற்றப்படுகின்ற பெருமையினையுடையது சிவஞானபோதம். இந்நூலை இயற்றியவரே மெய்கண்டார்.

திருஞான சம்பந்தரைப் போல மெய்கண்டாரும் சாமுசித்தரேயாவர்.

பரஞ்சோதி முனிவர் தமக்கு உபதேசித்த சிவஞானபோதத்தை மெய்கண்டார் தமிழிலே பன்னிரண்டு சூத்திரமாக வகுத்து வார்த்திகம் என்னும் பொழிப்புரை, உதாரணச் செய்யுள்கள் என்பனவற்றைச் சேர்த்து, சிவஞான போதத்தை இயற்றியுள்ளார்.

அருணந்தி சிவாசாரியரின் ஆணவ நிலையைப் போக்கி, அவருக்குச் சிவஞானபோதத்தை. உபதேசித்த பெருமையினையுடையவர் மெய்கண்டார்.

இலக்கண நூல்களில் தொல்காப்பியமும், நீதி நூல்களில் திருக்குறளும், காப்பிய நூல்களிற் சிலப்பதிகாரமும், யோக அனுபவ நுட்பங்களை உணர்த்துவதில் திருமந்திரமும், கற்பனைத்திறனில் கம்பராமாயணமும் பிறவும் தந்நிகரற்றுத் திகழ்தல்போல, நம் அருமைச் செந்தமிழ் மொழியின்கண் ஒப்புயர்வற்ற மெய்ப்பொருள் நூலாக வீறுற்று விளங்குவது சிவஞானபோதமாகும்.

சிவஞானபோதம் தமிழ் மொழிகண் இயற்றப்பெற்றிருப்பது குறித்துத் தமிழர் அனைவரும் ஒரு

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## நற் சிந்தனை

இடத்து மடந்தையை
வைத்த பெருமான்
நடத்தைக் கண்டால்
நாமுய்ந் தோமே.

சூரசங்கார மூர்த்தியே!

"இயற்கையாகவே சிவந்த நிறமுள்ளதும் ஜீவன்முத்தர்களாகிய அன்னப்பறவைகள் வசிப்பதும், அழகு என்கின்ற அமிர்ததாரை நிறைந்ததுமாகிய தாமரைமலரைப்போன்ற தேவரீரது பாதங்களில் எனது மனசாகிய வண்டானது சஞ்சரிக்கும் காரணத்தால் மகிழ்ச்சியடையட்டும்"

—ஆதிசங்கரர்.

## நோன்பு நாட்கள்

சென்ற திங்கட்கிழமை தொடங்கியுள்ள கந்தசஷ்டி நோன்பினை ஈழத்திலுள்ள சைவமக்கள் பக்திசிரத்தையோடு காத்து வருவதோடு முருகன் கோயில்கள் அனைத்திலும் கூட்டு வழிபாடுகளும், சமயச்சொற்பொழிவுகளும் வழமையிலும் சிறப்பாக நடைபெற்றும் வருவது ஈழத்தில் சைவமக்களின் சமயப்பற்றினையும் அவர்களின் எதிர்காலவாழ்வு இன்னும்ஏற்றமடையும் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

"கலைச்செல்வி" ஆதரவில்

## எழுத்தாளர் பேரவை

எதிர்வரும் 4-11-62ஞாயிற்றுக்கிழமை மாலை 3-30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில், யாழ்ப்பாணத் தமிழ் எழுத்தாளர் சங்கம் விரிவுபடுத்தற் கூட்டம் ஆரம்பமாகி திரு. க. தி. சம்பந்தன் அவர்கள் தலைமையில் (இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில்) நடைபெறும். அதைத் தொடர்ந்து 5-30 மணியிலிருந்து "கலைச்செல்வி" மாத இதழ் நிறுவன ஆதரவில் "ஈழநாடு" ஆசிரியர் தலைமையில், எழுத்தாளர் பேரவை ஆரம்பமாகி நடைபெறும்.

இந்தப்பேரவையில், திரு. சு. வேலுப்பிள்ளை (சு. வே) ஈழத்துச் சிறுகதைகள் பற்றியும், திரு. நா. சுப்பிரமணியன் சிங்களச் சிறுகதைகள் பற்றியும், திரு. தருமசிவராமு இந்தியச் சிறுகதைகள்பற்றியும், திரு. தி. ஸ்ரீனிவாசன் M.A. மேலைநாட்டுச் சிறுகதைகள் பற்றியும் உரைகள் நிகழ்த்துவார்கள்.

அருப்போட்டுமுலைமடவாள்பாகந்தோன்றும்
அணிகிளருருமென்னவடர்க்குங்கேழன்
மருப்போட்டுமேணிவயிரக்கோவைதோன்றும்
மணமலிந்தநடந்தோன்றுமணியார்வைகைத்
திருக்கோட்டினின்றதோர்திறமுந்தோன்றும்
செக்கர்வானொளிமிக்குத்திகழ்ந்தசோதிப்
பொருப்போட்டிநின்றதிண்புயமுந்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே,

x x x

ஊனாகியூனுளுயிராயுயிர்தோறுமாகி
வானாதியானபொருளாய்மதியாகிவெய்யோன்
றானாகியாண்பெண்ணுருவாகிச்சராசரங்க
ளானான்சிவன்மற்றவனீள்கழற்கன்புசெய்வாம்.

## தமிழின்பம்

[இந்துசாதனம் நடாத்திய சேதுப்பிள்ளை கட்டுரைப் போட்டியில் மாணவர் பகுதியில் முதல் பரிசைப்பெற்ற கட்டுரை முன்னர் வெளிவந்தது. மறுபிரிவில் முதற்பரிசுபெறும் கட்டுரையும் முன்னர் வெளிவந்தது. இரண்டாம் பரிசுபெறும் கட்டுரை]

தமிழ் மொழியின் முதல் உரை நடை நூலாகக் கருதப் பெறுவது "களவியலுரை" என வழங்கும் இறையனாரகப் பொருளுரையாம். அன்று தம் உள்ளக்கருத்தினையுரைக்கப் பாவடிவே ஏற்ற வாயிலாக அமைந்தது. மனத்து இருத்தவும், நினைவுகூரற்கும் ஏற்றதெனக் கொண்டனர். அன்று உரைநடை பெருங்காவியத்திடை யிடையேயோ அன்றி முன்னோர் நூலிற்குப் பொருள்கூறுங் காலத்தோ பயன்பட்டது. இலக்கண இலக்கியங்களுக்கு எழுதப்பெற்ற விளக்கவுரை வடிவில் உரைநடை விளங்கியது எனலாம். சான்றாகச் சிலம்பில் காணும் கட்டுரைப்பகுதிகளையும் தொல்காப்பிய விளக்கவுரைகளையும் கூறலாம். இயல்பாக உரைநடை வளர்ச்சி பெற்றது மிகப் பிற்காலத்திலாகும். மேனாட்டார் (the language that walks) என்ற பொருளில் வழங்கினர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வளர்ச்சி பெற்ற உரைநடை இலக்கியம் இன்று பல துறைகளில் நின்று நிலவுகின்றது.

பேராசிரியர் உயர்திரு. சேதுப்பிள்ளையவர்கள் தமிழ் முன்னை செய்த பெருந் தவத்தால் தோன்றியவர் என்றே கூறலாம். தமிழுலகின் இலக்கிய வானிற்றோன்றிய பெருஞ் சுடராவார். அறிஞராகமட்டும் அவர் விளங்கவில்லை. பண்புடைப் பெருந்தகையாகவும் விளங்கினர். இன்சொல்

(தொடர்ச்சி 4 ம் பக்கம்)

நம. சிவ. சண்முகம், M. A.
தென்னிந்தியா.

கலைச்செல்வி நடாத்திய சிறுகதைப் போட்டி, நகைச்சுவைப்போட்டிகளில் வெற்றி பெற்றோருக்குப் "புதினம்" ஆசிரியர் பரிசில்கள் வழங்குவார். ——

## அழகா! கதிநீ!

"அளவையூர் - சஞ்சீவி"

இராகம் : மோகனம் :: தாளம் : ஆதி

பல்லவி

வாவா முருகா வடிவேலவா
வாமனன் மருகா வள்ளியின் கணவா

அனுபல்லவி

வாதா டிவரும் மாயவெஞ் சூரரை
மாய்ந்தவ னேஉயர் வானவ ரின்துரை (வா)

சரணம்

வந்திடும் ஜென்ம வகை தெரியேனே
வாய்முத லைந்தின் வழியலை வேனே
அந்தத்தில் முடிவதை ஆய்ந்தறி யேனே
அழகா கதிநீ அறுபடை யானே. (வா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சுபகிருது ஸூ ஐப்பசி மீ
கஎ உ வெள்ளிக்கிழமை

## உலகம் உய்ய

முன்னொருகால் அசுரர்கள் தேவர்களை அல்லற்படுத்திப்பழிபாதகஞ்செய்தபொழுது விண்ணோர் வேண்டி விரதமிருந்த பயனல் முருகப் பெருமான் **உலகம் உய்ய** உதித்துத் தீமையை யகற்றி நன்மையை நாட்டினர் மனிதர்களுக்குள்ளும், அசுரர்களும் தேவர்களும் இருக்கின்றனர். அவ்விருவகையினரும் இக்காலத்திற் பொருதுவதனல் உலகில் அமைதியின்றிக் கலகமே நிலவுகின்றது; நீதி அருகிவிட்டது; நெறி மாறியது. இவ்வாறு இன்னற்படுகின்றவர்கள் ஆறுமாமுகத் தண்ணலை நினைத்து ஆறுநாள் விரதம் பூண்பரானல் குமரன் அருள் குவலயத்திற் குலவும்,

ஒழுக்கங்குன்றி ஆணவமேலீட்டினல் அவனி முழுவதும் பழியும் பாதகமும் பரவிவருமிக்காலத்திலே திருவருளைப் பெற்றாலன்றி நிலைமை மாறமாட்டாது. அதற்கு வழிபாடும் விரதமும் வேண்டும். சூரன் முதலாயினேர் இயற்றிய துன்பத்தைத் துடைத்து உலகிற் குதவிபுரிந்த குமரன் திருவடிகளை நினைத்து, ஆறுநாள் அருந்தவமியற்றும் நியமமுள்ள கந்தசட்டிக் காலத்தைச் சைவ மக்கள் உரிய முறையிலே தவப்பொழுதாக்கி விரதங் காப்பது மிகவும் வேண்டப்படுவதாகும். இப்புண்ணிய நாட்களிலே கந்தபுராணமாம் தெய்வநெறி நூலைக் கற்றல், கேட்டல், கருத்துரைத்தல் ஆகிய வழிகளில் அறிந்து ஆறுமுகப் பெருமானின் அருளைப் பெறுவது சாலச் சிறந்த சைவசாதனையாகும்.

புராணபடனம் என்ற வழமை அருகி வருகின்றது. தெய்வ நெறியைச் சிறப்புடன் தெளிவுபடுத்தும் புராணங்களைப் போற்றுகின்றவர்கள் மிகச் சிலரே. 'செம்மை நலமறியாத சிதடர்களாய்' விட்டமையாலன்றோ நாமின்று அல்லற்படுகின்றோம்.

வேலின் வெற்றி வாரமாகக் கந்தசட்டிப்பொழுதைச் சைவ மக்கள் அநுசரிப்பது நன்று. இவ்வாரத்திலே நாடெங்கும் கந்தபுராண படனமும் சொற்பெருக்கும் நிகழ்த்தப்படுதல் வேண்டும். முருகன் திருவிளையாடலின் பெருமையை மக்கள் அறிந்து இறை வழிபாட்டினல் இன்னலைப் போக்குவதற்குப் பழகுதல் வேண்டும்.

வந்த வினையும்
வருகின்ற வல்வினையும்
**கந்தனென்று** சொல்லக்
கலங்குமே — செந்திநகர்ச்
சேவகா வென்று
திருநீ றணிவார்க்கு
மேவவா ராதே வினை.

---

# அருணந்திசிவாசாரியார்

[நாவலர் மண்டபத்தில் நடைபெற்ற அருணந்திசிவாசாரியார் குருபூசைத் தினத்தன்று, சித்தாந்த பண்டிதர் திரு. வே. சோமசுந்தரம் அவர்கள் நிகழ்த்திய பிரசங்கத்தின் சாரம்.]

முற்றொடர்—2

என்றும் மாளாமலும் மீளாமலும் பரமானந்தத்தை மேலும், மேலும் அனுபவித்துக்கொண்டிருக்கும் இப்பரமுத்தி அழியாததற்குக் காரணம் ஒப்பில்லாத குருலிங்க சங்கம வழிபாடென்று சிவாகமம் செப்பும். அன்றியும் இந்த ஞானசிரியர் தமது அனுபூதி ஞானத்தைத் தமது சித்தியாரில் எடுத்துக்கூறியிருக்கின்றார், அது வருமாறு:

"சூரிய காந்தக்
கல்லினிடத்தே செய்ய
சுடர் தோன்றச்
சோதி தோன்றுமாபோல்
ஆரியனும் ஆசான்
வந்தருளால் தோன்ற
அடி ஞானம் ஆன்மாவில்
தோன்றும் தோன்றத்
தூரியனும் சிவன் தோன்றும்
தானும் தோன்றும்
தொல்லுலக மெல்லாம்
தன்னுள்ளே தோன்றும்
நேரியனாய் பரியனுமாய்
உயிர்க்குயிராய் அங்கே
நின்றநிலை யெல்லாம் முன்
நிகழ்ந்து தோன்றும்,"

எனவும்,

"பரப்பிரமம் இவனென்றும்,
பரசிவன் தானென்றும்
பரஞானம் இவனென்றும்
பராபரன் தானென்றும்
அரன்தரு சீர்நிலை யெல்லாம்
இவனே யென்றும்
அருட்குருவை வழிபடவே
அவனிவன் தானயே
இரங்கிய வாரணம்
ஆமை மீன் அண்டம் சினையை
இயல்பினெடும் பரிசித்தும்
நினைந்தும் பணித்தும்
பரிந்திவை தாமாக்குமாபோல்
சிவமே யாக்கும்
பரிசித்தும் சிந்தித்தும்
பார்த்தும் தானே!"

சிவோக பாவனையாவது உடம்பே நானென்றும் அது நீங்கிய வழிப்பிரமன் நானென்றும் இங்ஙனம் விபரீதமாக உணர்கின்ற உயிரானது சுட்டுணர்வுட்பட்ட அப்பாசமுமன்று, சுட்டுணர்விறந்து நின்ற அப்பொருளும் அன்று, இரண்டிற்கும் வேறெனக் கண்டு, அது நான் ஆனேன் என்றுவது நான் சிவனுனேன் என்றுவது பாவிக்கும் சுத்தாத்துவித பாவனையாகும். இதையே அருணந்தி சிவாசாரியார் சொல்கின்றார்,

"கண்ட இவையல்லேன் நான்
என்றகன்று காணுக்
கழிபரமும் நானல்லேன்
எனக்கருதிக் கசிந்த
தொண்டினெடும் உளத்தவன்
நின்ற கலப்பாலே [ருன்
சோகமெனப் பாவிக்கத்
தோன்றுவன் வேறன்றி
விண்டகலும் மலங்களெல்லாம்
கருட தியானத்தால்
விடமொழியும் அதுபோல்
விமலதையும் அடையும்
பண்டை மறைகளும் அது
நானே னென்று
பாவிக்கச் சொல்லுவதிப்
பாவகததைத்தானே."

"இந்தத் தேவதை வேறு நான் வேறு என்று எவன் மற்றோர் தேவதையைப் பாவனை செய்யுங்கால் அவன் அந்தத் தேவதையை அறிவானல்லன்; அதுபற்றி அவன் தேவர்களுக்குப் பசுப்போல் ஆகின்றான். ஆதலால் எவன் நான் பிரமம் என்று அபேத பாவனை பண்ணுகின்றானே அவன் ஈதெல்லாம் ஆகின்றான்" என்று பிரகதாரணிய சுருதி சொல்லுகின்றது.

"சிவன் வேறு, நான்வேறென்னும் துவிதபாவனையை விடுத்து எந்தச்சிவன் உளரோ அந்தச் சிவன் நானென்று எக்காலமும் அத்துவைதபாவனை செய்க" என்று சர்வஞ்ஞானேத்தராகமம் கூறுகின்றது.

"பேத மாகிய பாவனை
பேணுவ தெல்லாம்
ஏதமாகிய பந்தமே
எனதியா னெனுமால்
போத ஆருயிர்
அபேதபாவனைபுரி வஃதே
மாத ராருயிர் முத்தியென்
றுரைத்திடும் மறையும்"

என, திருவானைக்கா புராணத்திலும் கூறுகின்றதென்று இருமொழியும் கைவந்த பெரியோர்கள் சொல்லியிருக்கின்றனர். இவைகளால் துவித பாவனையை விடுத்து அத்துவித பாவனைபுரிதல் வேண்டும் என்பது பெறப்பட்டது. இந்தப் பாவனை மாயாவாதிகள் கூறும் பாவனை போல்வதன்று என்க.

---

## பொ. கைலாசபதி தினம்

சைவ சமய நெறிநின்று வாழ்ந்தவரும், பாரதநாட்டிற்குத் தலயாத்திரை சென்று வந்தவரும் பல துறைகளிலும் அறிவுபெற்று விளங்கியவரும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களால் போற்றிக் கொண்டாடப் பெற்றவரும் திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலைத் துணை முதல்வராகப் பணியாற்றி நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிகோலும் கல்வி வளர்ச்சியை நிர்ணயிக்கும் பொறுப்புள்ள ஆசிரியர்களுக்கு அறவுச் செல்வத்தை அள்ளி வழங்கிவந்து, சென்ற ஆண்டு சிவபதமடைந்தவருமாகிய பெரியார் திரு, பொ. கைலாசபதி B.Sc அவர்களின் நினைவு விழா 16-11-62 ல் வருகிறது. அத்தினத்தை இந்நாட்டிலுள்ள கல்விக்கூடங்களனைத்தும் சிறந்த முறையில் கொண்டாட வேண்டியது கடனாகும்.

---

நல்லைக்கீர்த்தனம் — 20.

## என்னடி பேச்சு

★

— யாழ்ப்பாணம் ந. வீரமணி —

இராகம் : பேகட : தாளம் : ஆதி

பல்லவி

என்னடி பேச்சிருக்குது — ஸகியே
சொன்னதையும் மறந்து சோதிக்குங் குஹனிடம்

அனுபல்லவி

அன்னமும் வெண்ணிலவும் ஆயிரம் தூதுவிட்டும்
இன்னமும் வந்திடாத இரும்பு மனத்தாரிடம் (என்)

சரணங்கள்

இலவுபழுக்கு மென்று இருந்த கிளியானேன்
இந்தவுலகினில் நான் தன்னந் தனியானேன்
குலவுவானே குமரன் கூடிமகிழ்ந் திடானே?
கோதையென் னுள்ளமறி யாநல்லைக் கந்தனிடம் (என்)

---

# நாவலர் திருநாள்

( 19—11—62 )

ஈழநாடு அன்னியர் ஆதிக்கத்தில் இருந்த காலமாகிய 1822ம் ஆண்டு நாவலர் பெருமான் அவதாரஞ்செய்தார். தமிழில் மிக்க பாண்டித்தியம் பெற்றார். சம்ஸ்கிருதம் —ஆங்கிலம் ஆகியமொழிகளிலும் தக்க அறிவுடையவரானர்.

இவர் சைவ சமய அறிவு முதிரப் பெற்றவர். சிறந்த பன்மொழிப் புலவராக விளங்கியவர். யாழ்ப்பாணத்து நல்லூரிலே தோன்றித் தமிழ்நாடெங்கும் சைவத்தமிழ முழக்கஞ்செய்தவர். தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் பொதுப்பணிக்காகத் தியாகஞ் செய்தார்.

ஏட்டுவடிவிலேயிருந்த சங்க நூல்கள் பலவற்றைப் புத்தக ரூபத்தில் வெளியிட்டு உதவினர். மாணவர்களுக்கேற்ற பல நூல்களையும் இலகுவான வசனநடையில் எழுதியுள்ளார். கிறிஸ்து சமய நூலாகிய பைபிளை தூய தமிழில்பெயர்த்து உதவினர், தமிழில் செவ்வியவசன நடையை உலக வழக்கில் கொண்டுவந்த முதற்புலவர். இலங்கை, இந்தியா ஆகியநாடுகளில் அளப்பரிய சேவை செய்துள்ளார்,

யாழ்ப்பாணத்திலும் சிதம்பரத்திலும் மற்றும்பல இடங்களிலும் பல சைவத்தமிழ்ப் பாடசாலைகளை நிறுவினர். அவை இன்றும் நல்லபணிசெய்கின்றன. அவைகள் என்றுங் குன்றாது நின்று ஒளிவீசநிலையான வருமானங்களையும் சேகரித்து வைத்துள்ளார். இவரின் இலட்சியத்தைப் பின்பற்றி இப்பொழுது பல நூற்றுக்கணக்கான பாடசாலைகள் தோன்றியுள்ளன. இவற்றுக்கெல்லாம் மூலபுருஷர் நாவலர்பெருமானே.

தமிழ்மக்கள் தமிழில் உயர்தரக்கல்வி பெற்றுச் சிறந்து விளங்கவேண்டுமென்பதற்காகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தோன்றி நான்கு ஆண்டுகளில் சகல உயர்தரக் கல்வியையும் பயிற்றுவிக்கவேண்டுமெனவும் எண்ணியவர். தமிழ்ச்சங்கம் ஒன்றும் இதற்காக ஸ்தாபிதமானது. அக்காலத்தில் தமிழ்நாடு முழுவதையுமே தட்டியெழுப்பினர்-மறுமலர்ச்சியூட்டினர். ஒழுக்கம் - பண்பாடு தவறியவர்களைத் தவறுகளைச்சுட்டிக் காட்டித் திருத்தினர்.

யாழ்ப்பாணத்தில் அரசாங்கத்தினர் செய்த அநியாயங்களை அம்பலப்படுத்தி, பொது மக்களுக்கு உதவி செய்தார். கரையூரில் பேதிநோய் கண்டபோது வேண்டிய உதவிபுரிந்தார். யாழ்நகரில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். சேர். பொன். இராமநாதன் அவர்களைச் சட்ட சபைப் பிரதிநிதியாக்கப் பல கூட்டங்கள் நடாத்தி அவரை வெற்றியீட்டச் செய்தார். அரசியல் ஞானியாகவும் விளங்கியவர் நாவலர் அவர்கள்.

நாவலர் தொண்டின் பெருமைகளை சேர் முத்துக்குமாரசுவாமி அவர்களும், சேர். பொன். இராமநாதன் அவர்களும் இலங்கைச் சட்டசபையில் முறையே 1870, 1884-ம் ஆண்டுகளில் புகுந்து பேசியுள்ளனர். "நல்லை நகராறுமுக நாவலர் பிறந்திலரேல், சொல்லுதமிழெங்கே சுருதியெங்கே ... ...." என புலவர்மணி சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் பாராட்டியுள்ளார்.

இவ்வளவு அருங்குண சீலரும், பெரும் மூளைசாலியுமான பெரியார் வேறு நாடுகளில் தோன்றியிருந்தால் எவ்வளவோ மதிப்பைக் கொடுத்திருப்பார்கள் என்பது திண்ணம். நம்நாடு

தொடர்ச்சி 3-ம் பக்கம்)

---

## வேதமயில் வாகனனே!

★

வேதமாம் மயில் மீதேறி
வெயில் தரு சுடரேபோல
போதமாம் ஒளியைத் தந்து
பொருந்திய அடியா ருள்ளம்
சீதள வனச மென்னச்
சிறப்புடன் வீற்றி ருக்கும்
நாதனே அறுமு கத்தோய்
நாயினேற் கருள் நல்காயோ.

— "குகன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரம் (4-11-62 — 10-11-62)

# உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

குடும்பத் தகராறுகள் தொடரும். மன அமைதி இருக்காது. வேலை கூடுதலாகஇருக்கும். ஆனால் நீர்போதியளவு ஈடு செய்யப்படுவீர்.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

புதுமுயற்சிகள் வெற்றிபெறும். எதிரிகளுக்கு இன்னல்கள் ஏற்படும் குடும்பநிலை திருப்திகரமாயிருக்காது. தந்தைவழி உறவினருடன் புழங்குவதில் எச்சரிக்கையாய் இருக்கவும்.

மிதுனராசி மிருகசிரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 3ம் பாதம்.

கண்ணேய்களுக்கு இடமுண்டு. மனம்அமைதிஅடையாது, குடும்பநிலைமையும் அவ்வளவு திருப்தியாயிருக்காது. பணமளவில் நல்லவாரம். முதலிரு நாட்களையும் எச்சரிக்கையோடு கழிக்கவும்.

கடகராசி புநர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

குடும்ப நிலையும் உடல்நிலையும் தொடர்ந்து திருப்தியற்றவையாகவே இருக்கும். வேலை வழமையிலுங் கூடுதலாகஇருக்கும். பணமளவில் ஓரளவு நல்லவாரம். செவ்வாய் புதனையும் வியாழன் காலையையும் எச்சரிக்கையோடு கழிக்கவும்,

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

தொழில் வெற்றி தொடரும். பண இலாபங்களும் உண்டாம். ஆனால் சிறு உடல்நிலைக்கோளாறுகளுக்கு இடமுண்டு. வியாழன் மாலையையும் வெள்ளி சனியையும் எச்சரிக்கையோடு கழிக்கவும்,

கன்னிராசி உத்தரம் 2, 3, 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

சகோதர சகோதரியர் உதவியாயிருப்பர், நிலபுலங்களால் இலாபமும்ஏற்படும், ஆனால் மனநிம்மதி இருக்காது. உடல்நிலை ஊறுபடும்.

துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

உடல்நிலைதொடர்ந்து தொல்லையுடையதாயிருக்கும். தாய் வழி உறவினரால் தொல்லைகள் ஏற்படலாம். பணமளவில் நல்லவாரம். விவசாய ஈடுபாடுகளில் வெற்றியும் ஏற்படும்.

விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

தந்தையாரின் உடல்நிலை ஊறுபடும். வேலை கூடுதலாக இருக்கும் விவசாய ஈடுபாடுகளில்வெற்றிநிச்சயம். நண்பர்கள் இக்கட்டுகளிலிருந்து காப்பர்.

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

சண்டைகளை மூட்டிக்கொள்வதில் முந்திநிற்பீர். அலுவலகத்தில் கலகங்கள் ஏற்படும். பணமளவில் ஓரளவு சாதகமான வாரம். குடும்ப நிலைமைகள் திருந்த வேண்டும்.

மகராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

உடல் நிலையும் குடும்ப விவகாரங்களும் தொடர்ந்து திருப்தியற்ற நிலையிலிருக்கும். ஆனால் தொழில் வெற்றியும் பண இலாபமும் உண்டாம். புதிய முயற்சிகள் சிரத்தையோடு கவனிக்கப்பட வேண்டும்.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

எதிரிகளை வெற்றிகொள்ள உம்மால் முடியும். நிலபுலங்களால் இலாபம் நிச்சயம். ஆனால் தந்தை வழி உறவினரால் தொல்லை, அல்லது தந்தையாருக்குச் சுகவீனம் உண்டாக இடமுண்டு

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

உடல்நிலை தொடர்ந்து திருப்தியற்றதாகவே இருக்கும். வேலை வழமையிலுங் கூடுதலாக இருக்கும். பணமளவில் நல்ல வாரம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

அச்சுவேலி வடக்கு
வயித்திலிங்கம் பொன்னுத்துரை
வழக்காளி

எதிராக

இல M B 3834
அச்சுவேலி வடக்கு
1. சூசை அந்தோனி
2, பெண் அருளம்மா
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B 3834ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்தகோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1962-ம்ஆண்டுடிசெம்பர் (மார்கழி) மாதம் 1-ம் திகதி (1-12-62) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 2166-13ம், இதில் ரூபா 1600 க்கு 18-1-61 திகதி தொடக்கம் 17-8-61 திகதிவரைக்கும் 100 க்கு 11 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும்இறுபடும்வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 2[illegible]3-20 சதம். இதில் ரூபா 395/- இறுபட்டது.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலிக்கோவிற்பற்று பத்தைவேளியிறை "புவனின் கிராய்" நிலப்பரப்பு (7ட்) குளி 3. 3/8ம் கிணறும் மற்றும் பயிர்களும் எல்லை கிழக்கு கோணன் கணபதிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு காசிப்பிள்ளை இரத்தினத்தின் ஆதனம், மேற்கு வெள்ளையன் செல்லனுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு வெள்ளையன் பொன்னனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதடங்கலும், ஆனல் குறித்த கிணற்றில் அரைவாசிப்பங்கும் வழி வாய்க்காலும் புறநீங்கல்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Valuer,
Licensed Auctioneer
தெல்லிப்பழை, 11-10-1962.
M. 171, 2-11-62.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

அராலி வடக்கு
நாகலிங்கம் தளையசிங்கம்
-வழக்காளி

இல M B 4150

எதிராக

அராலி கிழக்கு
சுப்பன் மாரிமுத்து —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 4150ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல்விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1962ம் ஆு கார்த்திகை மீ 24உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 1041. 10 சதமும் 14-7-61 தொடக்கம் 17-10-61 வரைக்கும் ரூபா 750 க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 180-07 சதமும் இக்கோட்டு செலவில் ரூபா 100 கொடுபட்டு இருக்கிறது,

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டை கோயிற்பற்று அராலி கிழக்கு இறை "வண்ணதட்டு" பர நில இலா(5) ஐந்தும் பனைமரங்களும் வீடும், கிணறும். எல்லை கிழக்கு வயிரவன் நாகமுத்தனுக்குரிய ஆதனம். வடக்கு ஒழுங்கை, மேற்கு [illegible] ஒழுங்கையும் நாகன் கந்தையாவின் உரிமையாளருக்குரிய ஆதனமும், தெற்கு வேலன் செல்லையாவுக்குரிய ஆதனம். இதடங்கலும்,

அ. ஜெகநாதன்,
கொமிஷனர் & விலைமதிப்பாளர்,
16 A, அம்மன் ரோட்
கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
M. 170 2-11-62.

## மாவைநகர் முருகவேள் பதிகம்

[நவாலியூர், திரு, க. சோமசுந்தரப்புலவர் அவர்கள் பாடியது.]

(முற்றொடர்)

கங்கைதரு மைந்தனே கார்த்திகைச் சிறுவனே
காளைக்கு றத்திகணவா
கற்புமலி தெய்வகுஞ் சரிகேள்வ னேயமரர்
கழலடி வணங்குமிறைவா
எங்குமுறை யாதியே யாவுமறி சோதியே
யாவர்க்கு மோருநீதியே
ஈராறு கையனே தாரேறு மெய்யனே
யென்னுயிர்க் கினியவுயிரே
சங்கமலி புலவனே சங்கரன் குரவனே
தமிழ்முனிக் கருள்தேசிகா
சரவண பவாயநம சரவண பவாயநம
சாமிநா னுனைநம்பினேன்
மங்கல நிறைந்தமறை யந்தணர் தினந்துதிசெய்
மாவைநக ரதனில்வாழும்
மங்கையுமை பாலனே செங்கைவடி
வேலனே மயில்வாக னக்கடவுளே. 7,

தேமேவு நவரத்ன முடியழகு மோராறு
திருமுகக் கருணையழகும்
தேனெழுகு தாமரைப் பூவேள்ள வருளொழுகு
திருவிழியீ ராறிழைக்கும்
பூமேவு செம்பவழ விதழழகு முத்துமணி
பூத்தபுன் னகையினழகும்
பொன்னகல மார்பழகு மின்னுகண் டலநிரைப்
பொலிவழகு மாலையழகும்
காமேவு பூங்குழற் கன்னிமா ரோரிருவர்
கட்டழகு மிட்டதண்டைக்
காலழகு மேழைநான் கண்குளிர வேகண்டு
களிகொள்வ தேக்காலமோ
மாமேவு வடிவோழிய மாருதப் புரவீக
வல்லிதரு மாவைநகர்வாழ்
மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
மயில்வாக னக்கடவுளே. 8.

- தொடரும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மானிப்பாய்
செல்லப்பா மாரிமுத்து
—வழக்காளி

இல. M.B. 3697.

எதிராக

மானிப்பாய் காலஞ்சென்ற
1. சின்னவன் முருகன்
,, 2. முருகன் பொன்னையா
3. முருகன் சிவகுரு

இரண்டாம் எதிரி முதலாம் எதிரியின் ஆதனததின் சட்ட சம்பந்தமான பதில் எதிராளி.
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 3697-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1962-ம்ஆு கார்த்திகைமீ 24உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபாய் 1289-ம் 44 சதமும் 12-10-60 தொடக்கம் 12-12-61 வரைக்கும் ரூபாய் 1000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 280-67 சதமும்.

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று, மானிப்பாய் இறை "கலட்டி" பர, நில. இலா. (2) இரண்டும் குளி 6-ம், பயிர்வகைகளும், கிணற்றில் பங்கும், வழி வாய்க்கால் தூர்வையில் பங்கும். இதற்கெல்லை கிழக்கு இக்காணிக்கும் தெற்கெல்லைக்காணிக்குமாக விடப்பட்ட 5 முழ அகலமுள்ள ஒழுங்கை நிலம், வடக்கு டானியேல் பேஸ்றரின் உரிமைக்காரரினுதனம், மேற்கு இராமநாதன் பெண் விசாலாட்சியினுதனம், தெற்கு சின்னவன் தம்பனுக்கும் பெண் ஜோச்சிக்குமூரிய ஆதனம்,

அ. ஜெகநாதன்,
கொம்மிஷனர் &விலைமதிப்பாளர்.
16 A, அம்மன் ரோட்
கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
M. 169 2-11-62

## நாவலர் நினைவுக் கட்டுரைப் போட்டி

எதிர்வரும் (19—11—62) கார்த்திகைத் திங்கள் 4-ம் நாள் நாவலர் பெருமான் நினைவுத்தினம்.

தமிழ் கூறும் நல்லுலகம் புகழ்கூறிப் போற்றும் நம்நாட்டு நாவலருக்கு இந்துசாதனம் ஈழத் தமிழர்கள் சார்பில் இவ்வாண்டு உவந்து புரியும் நன்றிப் பணியாக, நினைவுக் கட்டுரைப் போட்டி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதை மகிழ்ச்சியோடு அறியத் தருகின்றேம். போட்டி இரண்டு பிரிவுகளாக நடைபெறும்.

1. மாணவர் பிரிவு.
2. மற்றையோர் பிரிவு

ஒவ்வொரு பிரிவிலும் முதன்மைபெறும் மூவருக்கும் பரிசில்கள் வழங்கப்படும். அவர்களின் அந்தக் கட்டுரைகள் இந்துசாதனம் வைரவிழா மலர் சஞ்சிகையில் அவர்கள் புகைப்படங்களுடன் வெளியிடப்படும்.

தலைப்புகள்

1. தேவையும் நாவலர் சேவையும்.
2. நாவலர் செயல்வன்மை.
3, நாவலரும் பழந்தமிழ்நூல்களும்.

ஏதாவதொன்றைப்பற்றி (Foolscap) தாளில் 4 பக்கத்திற்குட்படாமலும் 8 பக்கங்களுக்கு மேற்படாமலும் எழுதி 20-11-62 க்கு இடையில் இந்துசாதனம் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

## மானு முதலியார் மடம்

—:—

தொல்புரத்திலுள்ள சிதம்பரம் அம்பலவாண சுவாமி மானு முதலியார் மடத்தின் வருடாந்தக்கூட்டம் சென்ற 14 - 10 - 62 இல் நடைபெற்றது. அக்கூட்டத்தில் தர்ம கர்த்தாக்களாகத் தெரிவுசெய்யப்பெற்றோர் பெயர்கள் பின்வருமாறு:- திருவாளர்கள், மா. கனகசுந்தரம் அக்கிராசனர், இ தம்பையா காரியதரிசி, சு. கந்தசுவாமி தனதிகாரியும் மனேஜரும், அ. தையல்பாலகர், க. குமாரசாமி, வ. நாகலிங்கம்.

## நாவலர் திருநாள்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

இன்னமும் அறிந்ததாகத் தெரியவில்லை. இனிமேலாகுதல் தக்கது செய்வோமாக.

நாவலர் அவர்களைச் சமயப் பெரியார் என மாத்திரங் கொள்ளாது தமிழ் மொழியைப் பெருமளவில் வளர்த்த பெரும்புலவர் எனக்கொள்ளுதலும் சாலவும் பொருத்தமானதாகும்.

19-11-62 அவர் இறைவனடி சேர்ந்த தினம். அத்தினத்தைக் கொண்டாட வேண்டியது தமிழ் மக்கள் யாவரினதும் கடமையாகும். அவரின் உன்னத இலட்சியங்களைப் பின்பற்றி நடக்க வேண்டும். பாடசாலைகள், கல்லூரிகள், மற்றும் கழகங்கள், சனசமூக நிலையங்கள் இத்தினத்தைப் பெருமளவில் கொண்டாட வேண்டும்.

யாழ்ப்பாணம் முதலிய பல இடங்களிலும் நடைபெறும் இப்பெரியார் நினைவு நாள்பற்றிய நிகழ்ச்சிகளை இலங்கை வானெலி அஞ்சல் செய்து ஒலிபரப்பினுல் பொதுமக்கள் நன்மை பெறுவர்.

நாவலர் தினத்தன்று பத்திரிகைகள், சஞ்சிகைகள் விசேட மலராக வெளியிட்டு அவர் பெருமைகளை நாடு அறியச் செய்யவேண்டியதும் அவசியமாகும்.

சி. சிவரத்தினம்,
நாவலர் பாடசாலை,
யாழ்ப்பாணம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சங்கானை கிழக்கு
பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம்
சங்கானை கிழக்கு, சங்கானை.
இதன் தலைவர்,
நாகலிங்கம் முத்தையா.

இல:- 4066 M. B,
1. செல்லப்பா குணரத்தினம்
2, மாரிமுத்து ஏகாம்பரம்,
சங்கானை கிழக்கு, சங்கானை.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M.B, 4066ஆம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் காணி கார்த்திகை மாதம் 24-ம் திகதி சனிக்கிழமை மாலை 4மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்,

தீர்வைத் தொகை:- ரூபா 1481/-ம், 12-6-61 தொடக்கம் 25-1-62வரையில் ரூபா 1370/-ற்கு 4 வீத வட்டியும் அதன்பின் பணம் முற்ருக இறுபடும் வரையில் முழுத் தீர்வைத் தொகைக்கு 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 193/05-ம். இதில் ரூபா 564/87 கொடுபட்டது.

ஆதனடாப்பு:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிச் வலிகாமம் மேற்கு சங்கானை கோவில்பற்று சங்கானை இறை "கலட்டி" நில. பரப்பு 5. இந்த நிலப்பரப்பு 5ற்கு எல்லை கிழக்கு தம்பு பெண் பறுபதத்தின் ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு கை ஒழுங்கை, தெற்கு வயித்திலிங்கம் கைம்பெண் கண்மணியின் ஆதனம்.

க. செல்வத்துரை,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
"முருகன் இல்லம்"
இணுவில், 29-9-62.
M 167 2-11-62.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

## — ஐக்கிய இலாப நிதி —

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை

என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை

சிறுப்பர்.

Std. 14.

# தமிழின்பம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லன்றி வன்சொல் அவர் வாயினின்று வாராது. பெரியோரை வியத்தலுமிலமே சிறியோரை யிகழ்தல் அதனினுமிலமே என்பதுபோல அவரவர் தகுதியறிந்து போற்றும் தகைமையுடையார், இன்சொல் இனிதீன்றல் கண்டுதான்போலும் வன்சொல்லைக் கைவிட்டார் என்று கூறுவதிலும், தமிழ்த் தென்றல் தவழும் தென் பாண்டிநாட்டுப்பண்பு இவர்பால் அமைந்து விட்டது எனவே ஏற்புடைத்தாகும். கற்ருரும் மற்ருரும் எளிதில் பொருளுணர்ந்து மகிழும் வகையில் இலக்கியச் சொற்கள் இடையிடையே இயன்றுவர எளியநிலையில் அமைந்து கேட்பாரைப் பிணித்து அவரினும் மாறுபட்டு அவர்சொற் கேளாதவரும் தம் செவியாரப் பருகித் தம்நிலை மறந்து அவர் வயப்படும் பண்பிலமைவது அவர் உரை நடை.

பழைய களவியலுரையோ, அன்றி இளம் பூரணர் நச்சினுர்க்கினியர் போன்ருர் நடையோ கற்பதற்கு எளியனவல்ல, இன்பம் நுகரும் பெற்றியமைந்தனவயல்ல, காலம் மாறிவிட்டது. எனவே கருத்துக்களை எடுத்துக்கூறும் முறையும் மாறியமைந்துள்ளது எனலாம். எளிமையும் புதுமையும் மிளிரக்காண்பது தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்கள் நடையேயாகும். எவ்வாறு தமிழுலகத்தார் உள்ளத்தெல்லாம் உள்ளவரகத் திரு. வி. க. அவர்கள் விளங்கினுரோ அதுபோன்றே கற்ருர்க்கும் கல்லார்க்கும் களிப்பளிக்கும் களிப்பாய் அமைந்தார் நம் சொல்லின் செல்வர். தமிழ் என்ற சொற்கு இனிமையென்று பொருள் என்ற வாக்கு எளிய இனிய நடை கைவரப்பெற்ற உயர்திரு. சேதுப்பிள்ளையவர்களின் உரை நடையால் உணரப்படும். இசை நயமும், எதுகைமோனை நயங்களுமுடையதாய், செவிக்கினியதாய் அமைவது அவர் நடை உள்ளத்தில் தெளிவிருப்பின் உரையிலும் தெளிவுண்டாகும். அவர் திறனெலாமெடுத்துரைக்கும் பெற்றி அடியேனுக்கு இல்லையெனினும் தமிழின் இன்பத்தைக்கூறும் 'தமிழின்ப'த்தளவில் நான் கண்டவாறு ஒருசில கூறியமைகின்றேன்.

பேராசிரியரது தமிழின்பமே இன்பந்தருவது என்ற உண்மையை அதன் நடைச் சிறப்பாலும், சொல்வளத்தாலும் நோக்கின் உயர்வாலும் அறியலாம். மேடைப் பேச்சுக்கள், கட்டுரைகள் என்ற பகுதிகளைப் பெற்றுத் திகழ்வது இந்நூல். பேச்சினைப்பற்றிக் கூறவேண்டின் தான் எடுத்துக் கொண்ட பொருள் எதுவாயினும் கேட்போர் உள்ள்த்தில் ஆழப்பதியச் செய்வதில் பேராசிரியரின் திறனை என்னென்பது? கம்பனும் பாரதியும் இடம் பெருச் சொற்பொழிவுகளே இல்லையெனலாம். இனிமையும், எளிமையும் அன்னேரிடம் அமைந்தமையே காரணமோ என்ற ஐயம் தோன்றும். புறநானூற்றைப்பற்றியமையும் சொற்பொழிவில் அந்நூலின் பொதுவான சிறப்புக்களைக் கூறிச் செல்கிருர். படை, குடி, கூழ், நட்பு, அமைச்சு, அரண் ஆறும் கூறி அவற்றுல் சிறந்து, ஏறென நின்ற அரசர்களைப் பற்றியும் கூறிச் செல்கிருர். புலமையொடு போர்செய்யும் வன்மையும் பெற்றிருந்த நிலையும் கூறுங்கால் அரணை விளக்கச், "செம்பிட்டுச் செய்த இஞ்சித்திருநகர்" என்னும் கம்பன் கவியே துணையாகின்றது. அன்றைய கோட்டைகளையும், நகர்களையும் எல்லோரும் அறிந்து கொள்ளும் வகையில் தற காலப் பெயர்களையும் தந்து விளக்குகின்ருர். கானப் பேரெயில், காளையார் கோவில் எனவும், ஏழெயில் ஏழு பொன் கோட்டையாகவும் பேரெயில் என்பது திருவாரூர்க்கருகில் அமைந்த பேகைக்பேரூராகவும், அதிகமான் கோட்டை அதமன் கோட்டையாகவும் விளங்கும் நிலையை அவர் கூறுங்கால் கேட்போர் ஓரளவிற்கு தம்மைச் சூழ்ந்த ஊர்களின் பழைய பெருமையைக் கண்டறிய வாய்ப்பாகின்றது

ஒரு பெயரையோ, பொருளையோ விளக்க நினைக்கும் பொழுது, எல்லோருமறந்த எடுத்துக் காட்டுகளால் விளக்குகின்ருர். ஏர் என்ற பொருட்பெயரும் எழிலி என்ற மேகத்தின் பெயரும் அமைந்த காரணத்தை விளக்குங்கால் இலக்கண உரையாசிரியர்களைப் படிக்கவேண்டிய உழைப்பையும் இல்லாதாக்கிப் பயன் காரணமாகப் பெற்றவை இப்பெயர்கள் என்கின்ருர். நிலத்தைப் பண்படுத்தியவாறு தம் உள்ளத்தையும் பண்படுத்தினர் வேளாளர் என்று கூறி விருந்தோம்பும் நிலையும் கூறுகிருர். திருக்குறளில் இடம்பெற்ற விருந்தோம்பற்பண்பு வேளாளரிடம் அதற்குப் பன்னூறு ஆண்டுகட்கு முன்னரேயே நிலைபெற்றிருந்தது என்று அவர் குடிப்பெருமையும் கூறுகின்ருர். ஒன்றை விளக்குங்கால் அதனுடன் தொடர்புடைப் பொருளையும் கூறிச் செல்லல் பண்பு. சோழநாட்டைப்பற்றிக் கூறுங்கால் ஈழநாட்டோடு இருந்த தொடர்பும் மலையாள நாட்டினருள் ஈழவர் என்ருெரு பிரிவு இருத்தலையும் எடுத்துக்காட்டிச் செல்லுகின்ருர்.

இனி எழுத்து நடையை நோக்குங்கால் சிறு சிறு சொற்ருெடர்களையே அவர் கையாண்டுள்ளார் என்பதறியலாம். எடுத்துக்காட்டாக, "விளை நிலத்தில் ஏர் இழுப்பது மாடு, பரம்படிப்பது மாடு, அறுவடைக் காலத்தில் சூடடிப்பது மாடு, களத்து நெல்லைக் களஞ்சியத்தில் சேர்ப்பது மாடு" என்ற தொடர்களைக் காட்டலாம். சிறுவர் படித்தாலும் புலமை நிரம்பப்பெற்ற பெரியவர் படித்தாலும் எளிதில் விளங்கக்கூடியனவாம்.

—தொடரும்.

## நல்லூர்க்கந்தன் சமயப்போட்டி - 1962 முடிவுகள்

—0—

**1-ம் பரிசு:**

திரு. சு. இராமநாதன்,
ஸ்கந்தவரோதயக்கல்லூரி,
சுன்னுகம்.

**2-ம் பரிசு:**

ஆ. குணசிங்கம்,
265, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## கூட்டு வழிபாடுகள்

—0—

இணுவில் கந்தசுவாமி கோயிலில் வழக்கம்போல் இவ்வாண்டும் கந்தசஷ்டி பூசையுடன் கூடிய விழாக்கள் நடைபெற்று வருகின்றன. தினமும் மாலை 7 மணி தொடக்கம் கூட்டுப்பிரார்த்தனை, [illegible] தேவாரப் பாட்டிசையும், அவ்வூர் மாணவர்களும், பிரபல சமய அறிஞர்களும் கலந்துகொள்ளும் சமயப் பிரசங்கங்களும் சிறப்புற நடைபெற்று வருகின்றன

இணுவில் இந்துசமய விருத்திச் சங்கத்தின் ஆதரவிலேயே இவை நடைபெற்று வருகின்றன.

— —




## மெய்கண்டதேவ நாயனர்

1-ம் பக்கத் தொடர்ச்சி

சேரப் பெருமிதம் கொண்டு மகிழலாம். 40 வரிகளில் 216 சொற்களில் 624 எழுத்துக்களில் சிவஞான போதம் அடங்கியுள்ளது. உலகிலேயே மிகச் சுருங்கிய — ஆனல் மிக மிகச் சிறந்து விரிந்த — நூல் சிவஞானபோதம் ஒன்றே என நாம் துணிந்து சொல்லலாம். சிவஞான போதம் "சைவாகமங்களின் பொருள் நிச்சயம் உணர்த்துவது எனக் காரணக்குறியாயிற்று" என்பர் சிவஞான முனிவர். சிவஞான போதம் செந்தமிழ் நூல்களுளெல்லாம் சென்னியிற் கொண்டு போற்றுதற்குரியது. இத்தொடருக்குச் 'சிரத்தானமாகக் கொண்டு' எனச் சிவஞானசுவாமிகள் பொருள் அருளிச் செய்திருத்தலின் தமிழ் நூல்களுளெல்லாம் தலையாயது இந்நூல் என்பது பெறப்படுகின்றது.

இத்தகைய பெருமை வாய்ந்த சிவஞானபோதத்தை ஆக்கி அளித்த மெய்கண்டதேவரின் சிறப்பியல் புகளை ஆராயப்புகுந்தால் அவை அளவிடற்கரியதாகும்.

ஆகவே சிவஞானபோத நூலின் அவையடக்கச் செய்யுளைச் சற்று நோக்குவாம்:-

"தம்மையுணர்ந்து தமையுடைய
தன்னுணர்வார்
எம்மையுடைமை எமை
இகழார் — தம்மை
உணரார் உணரார்
உடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்,"

எனக் காணப்படும் செய்யுள் ஒன்றனை, வேறு எந்த நூலிலும் காண்டல் அரிது. இங்ஙனம் தனிப் புதியதொரு முறையில் அவையடக்கம் கூறிய சிறப்பு மெய்கண்டார்கசே உரியதாகும்.

இச்செய்யுளில் தம்மினும் மேம்பட்ட தக்காரைப் போற்றும் பணிவும், தகவிலார் தம்மையெல்லாம் புறக்கணிக்கும் பெருமிதமும் ஒருங்கே இயைந்து விளங்குகின்றன.

இவ்வாறெல்லாம் பெரும் புகழ் ஈட்டிய மெய்கண்ட தேவரின் ஞாபகார்த்தமாக நாம் செய்யவேண்டியன:—

(1) அன்னரின் குருபூசை விழாவைக் கொண்டாடல்.

(2) இல்லங்கள் தோறும் சிவஞான போதம் மிளிரச் செய்தல்.

(3) சைவ ஸ்தாபனங்கள் தோறும் சிவஞானபோத வகுப்புநடைபெறவைத்தல்.

(4) சைவ சித்தாந்த ஆராய்ச்சிக் கழகம் நிறுவுதல் என்பனவாகும். சைவம் என்பது சிவத்தோடு சம்பந்தமுடையது எனப் பொருள்படும். சைவசமயத்தின் தன்மையே சைவ ஏறியியல்பு எனப்படும். இவ்வியல்பை நன்குணர்ந்தவரே சைவத்திற் பற்றுடையவராய் சிவவழிபாட்டைத் தவருமற் செய்து பேரின்பம் பெற்றுய்வர்.

ஆகவே சிவஞானபோதத்தை நன்குகற்று சைவத்தின் பொருளை அறிந்து அறத்தின் வழிவாழ்வோமாக.

"சிந்திப்பாம் வெண்ணெய்
நல்லூர் மெய்கண்ட தேவனடி
வந்திப்பாம் வாழ்த்திமகிழ்வாம்"

## இலவச சமய தீட்சை

—0—

எதிர்வரும் 19உ (4-11-62) ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில் அகில இலங்கைப் பொதுஜன சேவைச் சங்க சமயப்பிரசார சபையினரால் நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக்கழக ஆதரவில் இலவச தீட்சை ஸ்ரீ பேச்சியம்மன் என வழங்கும் ஸ்ரீ இராச இராசேசுவரியம்பாள் ஆலயத்தில் நிறைவேறும். பிரம்மஸ்ரீ. இ. ஞான சேகரக்குருக்களவர்கள் மேற்படி தீட்சையை நிறைவேற்றி வைப்பார்கள்.

— —

## கவிதைப் போட்டி

துறைநீலாவணை இலக்கியப் பேரவையினர் தைப்பொங்கல் தினத்தையொட்டிக் கவிதைப்போட்டி ஒன்றினை நடாத்தத் தீர்மானித்துள்ளனர் என்றும், கவிதைக்குரிய கருப்பொருள் எதுவாயுமிருக்கலாமென்றும், எந்த யாப்பிலும் எந்த அளவிலும் கவிதைகள் எழுதலாமென்றும், ஒரே கவிஞரே எத்தனை கவிதைகளையும் அனுப்பலாமென்றும் நியதிகள் விதிக்கப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணூர்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 2-11-1962 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர், நம, சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org